**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.வீ.காளிதாசன், பி.காம்.,எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்.**

**2026 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 24–ஆம், நாள் செவ்வாய்கிழமை**

**இ.ம.எண்.2/2026**
**இன்**
**அசல் வழக்கு எண்.110/2013**

1. வேலுசாமி
2. சிவகுமார் ...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. எஸ்.எம். பெரியசாமி
2. எஸ்.எம். பாலசுப்பிரமணியம்
3. எம். கண்ணம்மாள்
4. எம். தமிழரசன் ... எதிர்மனுவாதிகள்/வாதிகள்

இம்மனு இறுதியாக 24.02.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.திரு.ஆர்.மகேசன் B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.சின்னசாமி, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

i) இம்மனுவானது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை அசல் வழக்கில் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை மன்னித்து

ஏற்கவேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை VIII விதி 1 (ஏ) ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/ வாதிகள், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதராக விளம்புகை, நிரந்தர மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். இம்மனுவில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கிற்கு முக்கியமான ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோதே தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது. எனவே, மனுவில் கண்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து ஏற்க வேண்டி இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த காலதாமதத்தை மன்னித்து மனுவை அனுமதிக்க வேண்டுமென்பதே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் அவர்கள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ளது உண்மையே. மேற்படி ஆவணங்கள் அவர்கள் தரப்பு வழக்கினை எடுத்துக்கூற முக்கிய ஆவணங்கள் என்பதை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டும். மனுதாரர்கள் வேண்டுமென்றே வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற

எண்ணத்தில் கூடுதல் ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார்கள். மேலும், மனுதாரர்கள் காலம் கடந்து மனுதாக்கல் செய்ததற்கு எந்தவிதமான காரணங்களையும் மனுவில் குறிப்பிடவில்லை. எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**4. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :-**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:-**

இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கின் ஆவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், அசல் வழக்கு எண்.110/2013 வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1 (ஏ) ன் படி மனுவில் கண்டுள்ள கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து ஏற்கவேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இரு தரப்பு வாதுரைகள், வழக்கின் ஆவணங்கள் மற்றும் மனுவின் சங்கதிகள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு எதிராக சொல்லப்பட்டுள்ள

முக்கியமான சங்கதியானது மனுதாரர்கள் காலதாமதமாக இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி காலதாமதத்திற்கு மனுதாரர்கள் எவ்வித காரணமும் தெரிவிக்கவில்லை என்றும், வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தான் மேற்படி கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்கள், எனவே, அதனை இந்த வழக்கில் அனுமதிப்பது அவசியமற்றது என்பதேயாகும்.

7) வழக்கில் கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்ததில், அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சிய விசாரணை முடிவுற்று மனுதாரர்கள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக தற்போது தான் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்.110/2013 வழக்கானது கடந்த 2013ம் ஆண்டு தாக்கல் செய்து கடந்த 12 ஆண்டுகளாக நிலுவையிலிருந்து வருகிறது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை முன்பே தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டதாகவும், ஆனால், மேற்படி ஆவணங்கள் பற்றிய விவரத்தை தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி ஆவணங்களை முன்பே தாக்கல் செய்யாததற்கு மனுதாரர்கள் தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. இருப்பினும் மனுதாரர்களுக்கு அவர்கள் தரப்பு சாட்சியத்தை முன்னிலைப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பளிக்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், ஆவணங்களை வழக்கு கோப்பில் சேர்ப்பதாலேயோ அல்லது சான்றாவணமாக குறியீடு செய்வதாலேயோ அந்த ஆவணத்தை நிரூபணம் செய்ததாக கருதமுடியாது. மேற்படி ஆவணங்களின் தொடர்புடைமை மற்றும் ஏற்புடைமை சம்பந்தமாக வழக்கின் இறுதி விசாரணை முடிந்து தீர்ப்பின் போது தான் பரிசீலனை செய்யமுடியும். எனவே, மேற்படி மனுவை இந்நீதிமன்றம்

அனுமதிக்கலாம் என்று முடிவு செய்கிறது. இருப்பினும், வழக்கில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ஈடுசெய்வது அவசியமென்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**முடிவாக,**

இந்த மனு ரூ.1,000/– செலவுத்தொகையை எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு செலுத்தவேண்டுமென்ற நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.24 18:57:01 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

**<u>பிற்சேர்க்கை:–</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.24 18:57:06 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

Draft/**Fair Order**

**IA**.2/2026
**in OS.No.**110/2013
**Dated:** 24.02.2026
**DMC, Palladam.**